# புள்ளடியின் பலம்
කතිරයේ බලය

ISSN-2706-0055

தொகுதி 5 இதழ் 3 தேர்தல் ஆணைக்குழு செப்டெம்பர் – டிசம்பர் 2021




# 18 வயதை எய்தியவுடன் இளைஞர் சமூகத்திற்கு தேருநர் இடாப்பில் பதிவை வழங்குதல்


**சிந்தக்க குலரத்ன**
மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம், விசாரணைகள் மற்றும் திட்டமிடல்)


1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கமைவாக ஆண்டுதோறும் யூன் மாதம் முதலாம் திகதிக்கு பதினெட்டு (18) வயதை எய்தியுள்ள ஆட்கள் நேருநர்களாகப் பதிவுசெய்யப்படுகின்றனர். இதன்போது இலங்கையின் அரசியலமைப்பின் 89 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்படும் தகைமையீனமொன்றுக்கு உட்படாதவராக இருக்க வேண்டுமென்பதோடு யாதேனும் தேர்தல் மாவட்டமொன்றின் இடாப்பொன்றில் ஆளொருவரின் பெயரை உட்படுத்திக்கொள்வதற்கு பதிவுசெய்துகொள்ளப்படும் ஆண்டு யூன் மாதம் முதலாம் திகதிக்கு அதாவது தகைமைபெறும் திகதியன்று அம்மாவட்டத்தில் 'பொதுவான வதிவை' கொண்டிருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு பொதுவான வதிவைக் கொண்டுள்ள முகவரியானது 'தகைமைபெறும் முகவரி' ஆகவும் கணிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் தேருநர் இடாப்பு மீளாய்வு இடம்பெறுவதுடன், யாதேனுமொரு தேர்தலின்போது அத்தேர்தல் அறிவிப்புச்செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருந்த தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்படும் ஆட்களுக்கு மாத்திரம் வாக்களிக்க உரிமையுண்டு. இவ்வேற்பாடு பற்றி அரசியலமைப்பின் 88 ஆவது உறுப்புரையில் 'தோதான தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்பட்டிருந்தாலொழிய வாக்களிப்பதற்கு உரிமை பெற மாட்டார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த தேர்தல் அறிவிப்புச்செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பே இங்கு தோதான தேருநர் இடாப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தில் காணப்படும் மேற்கூறிய ஏற்பாடுகளுக்கமைய, குறித்தவோர் ஆண்டில் தேருநர்களைப் பதிவுசெய்யும்போது யூன் மாதம் முதலாம் திகதி பிந்தி பதினெட்டு (18) வயதை எய்தியுள்ள ஆட்களுக்கு அடுத்தாண்டு மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் யாதேனுமொரு தேர்தல் நடைபெறுமாயின், வாக்களிப்பதற்கு உரிமை கிடைக்காது. இதன் காரணமாக பத்தொன்பது (19) வயது அல்லது இருபது (20) வயதையும் எய்தியதன் பின்னரும் வாக்களிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. இதன் காரணமாக பதினெட்டு (18) வயது பூர்த்தியடைந்தவர்கள் உரிய திகதிக்கு (யூன் மாதம் முதலாம் திகதி) பிந்தி தகைமை பெற்றபோதும் அவர்களுக்கு தமது வாக்கைப் பதிவுசெய்வதற்கு அடுத்தாண்டு யூன் மாதம் 01 ஆம் திகதி வரை வாய்ப்பு கிடைக்காது.

குறிப்பாக தற்போதுள்ள முறைப்படி தேருநர் இடாப்பு செல்லுபடியாகும் ஆண்டின் மே மாதம் 31 ஆம் திகதிக்கு பதினெட்டு (18) வயதை எய்தியுள்ள ஆட்களுக்கு மாத்திரமே யாதேனுமோர் ஆண்டில் நடைபெறும் தேர்தலொன்றின்போது வாக்களிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. இதன் காரணமாக தேருநர்களைக் கணக்கெடுக்கும் திகதி பிந்தி நடைபெறும் தேர்தலொன்றின்போது பதினெட்டு (18) வயதை எய்தியுள்ள ஆட்கள் வாக்களிப்பதற்கான வாய்ப்பை இழப்பர்.

பதினெட்டு (18) வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளுக்கு உரித்தாக வேண்டிய தேருநர் ஒருவராக பதிவுசெய்துகொள்வதற்கான உரிமையை உரிய தினத்திலேயே வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இளைஞர் குழுக்களினாலும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளினாலும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அடிக்கடி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. மேலும் இது சம்பந்தமாக கவனம் செலுத்துமாறு கோரி அண்மையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக கையொப்பமிட்ட மனுவொன்றை தேர்தல் ஆணைக்குழு ஊடாக சனாதிபதிக்கும் பிரதம அமைச்சருக்கும் சமர்ப்பித்துள்ளனர். அதேபோல் பதினெட்டு (18) வயதைத் தாண்டிய இளைஞர்கள் வாக்குரிமையை இழத்தல் சம்பந்தமாக மேற்குறித்த விடயங்களுக்கு மேலதிகமாக இளைஞர் அமைப்பொன்றினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கலந்துரையாடும்போது ஆகக் கூடுதலான அளவு இளம் பிரஜைகளுக்கு வாக்குரிமை கிடைக்கத் தக்கவாறு சட்டங்களை இயற்றும் தேவையும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல், இது சம்பந்தமாக அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளினாலும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆகையால், இப்பிரேரணை தேர்தல் ஆணைக்குழுவினால் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், அதற்கான உரிய சட்டத் திருத்தங்கள் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவின் 2017–2020 மூலோபாயத் திட்டத்திலும் உட்சேர்க்கப்பட்டு இருந்தபோதும், அக்காலப்பகுதியில் அதனை அமுல்படுத்த முடியாமலிருந்ததோடு அதனை யதார்த்தமாக மாற்றுவதற்கு அவசிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தேருநர் இடாப்பை வருடாந்தம் அத்தாட்சிப்படுத்துவதற்கு மேலதிகமாக பதினெட்டு வயதை எய்தும் ஆட்களின் பெயர்கள் அடங்கிய குறைநிரப்பு நிரல்களை நான்கு மாதங்களுக்கொருமுறை தயாரிப்பதற்கும் அச்செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டு வாக்கெடுப்பொன்றுக்கு முன்னர் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தோதான தேருநர் இடாப்பிற்கு

மேலதிகமாகவும் அதன் ஒரு பகுதியாகவும் இக்குறைநிரப்பு நிரலைக் கருதுவதற்கும் கூடியதாக இருந்தமையும் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திருத்தம் மூலம் முன்வைத்து வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய திருத்தம் யாதெனில், 'தகைமைபெறும்' திகதியாகக் குறிப்பிடப்படும் 'யாதேனுமோர் ஆண்டின் யூன் மாதம் முதலாம் திகதி' என்பதற்குப் பதிலாக 'பெப்ரவரி மாதம் முதலாம் திகதி' அதற்காக குறித்துரைக்கப்பட்டமையாகும். வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின்படி மேற்கொள்ளப்படும் பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்குரிய அடிப்படை மதிப்பீடுகளைத் தயாரிக்கும் பணி வருடத்தின் முதல் காலாண்டில் மேற்கொள்ளப்படுவதுடன், அத்தகைய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் இரண்டாம், மூன்றாம் காலாண்டுகளில் பெரும்பாலும் அமுல்படுத்தப்படுகிறது. ஆகையால், இக்கருத்திட்டங்களுக்குரிய கண்காணிப்பு, முன்னேற்ற அறிக்கைகளை வழங்கல்கள், நிலையப் பரிசோதனைகள் போன்ற வெளிக்களப் பணிகள் காரணமாக இக்காலத்தை தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தில் கணக்கெடுப்பு அலுவலர்களாக செயற்படும் கிராம அலுவலர்களுக்கு கடமைப்பளு மிகுந்த ஒரு காலமாகும். அதேபோல், பெரும்பாலும் இரண்டாம் காலாண்டு முதல் வருட இறுதி வரை ஒவ்வொரு மாதத்திலும் பல்வேறுபட்ட வைபவங்களையும் நினைவு வைபவங்களையும் ஏற்பாடுசெய்வதற்கு கிராம அலுவலர்களுக்கு நேரிடுகிறது. இவ்வனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்டு வெளிக்கள கடமைகள் குறைந்த முதல் காலாண்டில் 'பெப்ரவரி மாத' முதலாம் நாளை தகைமைபெறும் தினமாகக் குறித்துரைக்கும் பொருட்டு குறித்த திருத்தங்கள் இதன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் குறைநிரப்பு நிரல்கள் தயாரிக்கப்படும் காலப்பகுதிகள்,

- **யாதேனுமோர் ஆண்டில் பெப்ரவரி மாதம் முதலாம் தேதியிலிருந்து மே மாதம் 31 ஆந் திகதி (.02.01 முதல் 05.31)**
- **யூன் மாதம் முதலாம் தேதியிலிருந்து செப்டம்பர் மாதம் 30 (06.01 முதல் 09.30)**
- **அக்டோபர் மாதம் முதலாம் தேதியிலிருந்து சனவரி மாதம் 31 (10.01 முதல் 01.31)**

காலப்பகுதிக்கு ஏற்புடைய குறைநிரப்பு நிரல், அந்தந்த தேர்தல் மாவட்டத்தின் பதிவு அலுவலரினால் இரண்டு வாரங்களுக்குள் வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலமும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிவரும் செய்திப் பத்திரிகையொன்றிலேனும் பிரசுரிக்கப்பட்டு அவ்வறிவித்தலில் குறித்த குறைநிரப்பு நிரல்களின் பிரதிகளை பதிவு அலுவலர் அலுவலகத்தில் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் அத்தேர்தல் மாவட்டத்தின் வேறோர் இடத்தில் நியாயமான நேரமொன்றினுள் பரீட்சிப்பதற்கு வாய்ப்புள்ளதென்பதையும் அறிவிக்க வேண்டும். அவ்வறிவித்தல் திகதியிலிருந்து பத்து நாட்களுக்குள் தமது பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கு உரித்துள்ளதெனத் தெரிவிக்கும் ஆட்களுக்கு பதிவு அலுவலருக்கு விண்ணப்பிக்க முடியும்.

அதேபோல் குறைநிரப்பு இடாப்பில் உட்சேர்க்கப்பட்ட ஒரு பெயருக்கு ஆட்சேபனை இருப்பின், குறித்த ஆட்சேபனையையும் அறிவித்தல் திகதியிலிருந்து பத்து நாட்களுக்குள் பதிவு அலுவலருக்கு சமர்ப்பிக்க வேண்டும். இந்த உரிமைக்கோரிக்கைகளும் ஆட்சேபனைகளும் சம்பந்தமாக செயலாற்றப்பட வேண்டிய நடைமுறை பற்றி 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 14(6) இலிருந்து 14(16) வரையான பிரிவுகளிலும் 15 ஆம் பிரிவிலுமுள்ள ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடைத்தாக்கிக்கொள்ளப்பட வேண்டும்.

அத்தகைய உரிமைக்கோரிக்கைகளையும் ஆட்சேபனைகளையும் நிச்சயித்துக்கொண்ட பின் அக்குறைநிரப்பு நிரல் பதிவு அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்திய குறைநிரப்பு நிரல் தேர்தல் இடாப்பின் இணைப்பொன்றாக உட்சேர்க்கப்பட வேண்டும். இதனடிப்படையில் தேர்தலொன்று பிரகடனம் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அத்தாட்சிப்படுத்திய குறைநிரப்பு நிரல்கள் தோதான தேருநர் இடாப்பின் ஒரு பகுதியாகக் கருதப்படுவதன் காரணமாக பதினெட்டு வயதை எய்திய ஆட்களுக்கு, பதினெட்டு வயதை எய்தி நான்கு மாத காலத்துள் தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்ப்பதற்கு வாய்ப்பு உரித்தாகும்.

குறிப்பாக குறிப்பிடப்பட வேண்டிய விடயம் யாதெனில், சட்டத்தில் இத்திருத்தப்படி குறைநிரப்பு நிரல்களுக்கு பெயர்களை உட்சேர்ப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கக்கூடியதாக இருப்பது அக்காலத்துள் பதினெட்டு வயதை எய்திய ஆட்களுக்கு மாத்திரமே. வேறேதேனுமொரு காரணத்தினால் பிரதான தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்க்க முடியாமல் சென்ற ஆட்களுக்கு இத்திருத்தத்தின் கீழ் பெயரை உட்சேர்க்க வாய்ப்பு கிடையாது.

## மீளாய்வு

தேருநரொருவராகப் பதிவுசெய்துகொள்வதற்கான ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்தி அதற்கான வாய்ப்பை விரிவுபடுத்தி உரிய வயதை எய்தியவுடன் தேருநர் இடாப்பில் பதிவுசெய்துகொள்வதற்கும் அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட தேருநர்களுக்கு எதிர்நோக்கும் முதலானது தேர்தலிலேயே வாக்களிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற தேர்தல் ஆணைக்குழுவின் கொள்கை, இத்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் ஈடேறியது. அதனடிப்படையில் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் தேருநர் இடாப்பைத் தயாரித்தலும் தகைமைபெற்ற பிரஜைகள் அடங்கிய தேர்தல் செயன்முறையொன்றின் கீழ் பதினெட்டு(18) வயதை எய்திய இளைஞர்களுக்கு வாக்களிக்கக்கூடிய விதத்தில் குறைநிரப்பு தேருநர் இடாப்பைத் தயாரிப்பதற்கான சட்டங்களை ஆக்குவதற்கு 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தில் 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்த) சட்டத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு திருத்திய சட்டம் 2022.02.01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும். இது ஜனநாயகத்தை மதிக்கும் ஏராளமான திறத்தவர்களின் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளதென்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். இளைஞர் சமுதாயத்தை தேர்தல் செயன்முறையில் தொழிற்படு ரீதியாக பங்கேற்கச்செய்தல் இன்றியமையாததாகக் காணப்படுவதுடன், அதன் மீது அனைத்து அமைப்புகளும் கவனம் செலுத்துவதும் உகந்த நடவடிக்கைகளை எடுப்பதும் அவசியமென்பதையும் குறிப்பிட வேண்டும்.

# தேர்தல் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள்

தேர்தல் சட்டங்களை தற்காலத்திற்கு பொருத்தமானவாறு திருத்தம் செய்வதற்கான தேவை நீண்டகாலமாக பங்கீடுபாட்டாளர்களால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கவனம் செலுத்திய தேர்தல் ஆணைக்குழு, சம்பந்தப்பட்ட சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதன் தேவை குறித்து கௌரவ பிரதம அமைச்சருடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது அறிவிக்கப்பட்டதுடன் அதற்குப் பதிலளித்த கௌரவ பிரதம அமைச்சர், தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்கான யோசனைகளை முன்வைப்பதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளார். அத்தெரிவுக்குழுவுக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் ஒரு பொழிப்பு கீழ் தரப்பட்டுள்ளது.

## அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்வதற்கான முறைமை

இலங்கையின் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்புநோக்கும் போது தற்போது பதிவுசெய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமானதாக உள்ளதென்பதுடன் அது தேர்தல் முகாமைத்துவத்தை சிக்கலான நிலைக்கு உள்ளாக்குவதால் இவ்வரசியல் கட்சிகளைப் பதிவுசெய்யும் முறைமை குறித்து பரிசீலித்து தகுந்த திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக பின்வரும் முக்கிய விடயங்கள் மீது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது:

- அரசியல் கட்சிகளைப் பதிவு செய்து, அங்கீகரிக்கும் முறைமையை பிராந்திய அரசியல் கட்சிகள், பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என்ற அடிப்படையில் வகைப்படுத்தல்.
- மக்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் அரசியல் கட்சியொன்றாக அங்கீகரிக்கப்படல்.
- அரசியல் கட்சி யாப்புகளில் ஜனநாயகமயப் பண்புகளை உட்படுத்துதல்
- அரசியல் கட்சிகள் கூட்டிணைதல், கூட்டணிக் கட்சியொன்றாக அங்கீகரிக்கப்படல் பற்றிய மீளாய்வு
- அரசியல் கட்சிகள் சிலவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்பின் செயல்வலுப்பெறும் காலம் பற்றிய சட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- கூட்டணியாகப் போட்டியிடுதலும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளும்.

## தேர்தல் முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள்

பாராளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களுக்கு தற்போதுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ மற்றும் விருப்பு முறை பற்றிய மக்களின் நம்பிக்கை பெரும்பாலும் முறிவடைந்துள்ளது. அதேபோல், கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்குமிடையிலும் முறுகல்கள் தோன்றும் ஒரு தேர்தல் முறையாகவிருப்பதனால் மாற்றுத் தேர்தல் முறைகளை அறிமுகம் செய்வது தேர்தல் ஆணைக்குழுவின் எதிர்பார்ப்பாகும். தனியுறுப்பினர் தொகுதி மற்றும் விகிதாசார சதவீதமாக பல்வேறு பிரதிநிதிகளுக்கு வாய்ப்புக் கிடைக்கும் நியாயமான ஒரு சதவீதத்தைக் கொண்ட கலப்பு விகிதாசார பிரதிநிதித்துவ முறையை மிகச் சிறந்த ஒரு தேர்தல் முறையாக தேர்தல் ஆணைக்குழு கருதுகிறது. சதவீத அடிப்படையில் 60% வீதம், 40% வீதம் என்றவாறு விகிதாசாரத்தைப் பேணுவது சிறந்ததொரு பிரதிநிதித்துவத்திற்கும் பிரச்சினைகள் குறைவடைவதற்கும் காரணமாக அமையுமென தேர்தல் ஆணைக்குழு கருதுவதுடன் கேட்டுப்பெறும் வாக்குச்சீட்டு முறை பற்றியும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## தேர்தல் திகதி குறிப்பதற்கும் தேவைக்கேற்ப ஒத்திவைப்பதற்குமான அதிகாரத்தை தேர்தல் ஆணைக்குழுவுக்கு பெற்றுக்கொள்ளல்

ஒரே சட்டத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற போதிலும் இடைக்கிடை தேர்தல்களை/ வாக்கெடுப்புக்களை நடாத்துவதற்குப் பதிலாக குறித்ததொரு தினத்தில் அவற்றை நடாத்துவதற்கும் ஒவ்வொரு தேர்தல்/ வாக்கெடுப்புக்கான திகதி குறிப்பதற்கும் நடைமுறை நிலைமைகளின்படி தேவைக்கேற்ப அவற்றை ஒத்திவைப்பதற்குமான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக வேண்டும்.

## முன்கூட்டிய வாக்களிப்பு (Advance Voting and Special Polling Station)

ஊடகவியலாளர்கள், கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் வேறு அத்தியாவசிய சேவைகளுக்கு தற்போது அமுலிலுள்ள அஞ்சல் மூலம் வாக்களிக்கும் முறையின் கீழ் வசதிகளுள்ள அரச, நியதிச்சட்ட, அத்தியாவசிய தொழில் துறைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் அல்லது முன்கூட்டிய வாக்கெடுப்புத் தினமொன்றை நடாத்துவதற்கும் வாக்கெடுப்பு நடைபெறும் தினத்தில் விசேட வாக்கெடுப்பு நிலையங்களை நிறுவுவதற்கும் முன்மொழியப்படுகிறது.

வாக்கெடுப்பு நிலையத்திற்கு வர முடியாத நிலையிலுள்ள அல்லது வந்தபோதும் வாக்களிக்க முடியாத நிலையிலுள்ள வலதுகுறைந்தவர்களுக்கு நடமாடும் வாக்கெடுப்பு நிலையங்களை ஏற்படுத்தி தேர்தல் அலுவலர்களை அவர்களின் வீட்டிற்கு அனுப்பிவைத்து வாக்களிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் "பிரெயில்" முறை போன்ற மாற்று முறைகளை பயன்படுத்துவதற்கும் உரிய சட்டங்களை ஆக்குதல்.

## இலத்திரனியல் வாக்குப் பதிவு முறையை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவம்

வாக்குச்சீட்டுக்கள் மூலம் வாக்களிப்பதற்குப் பதிலாக நீண்டகாலமாகவே முன்மொழியப்படும் இலத்திரனியல் வாக்குப்பதிவு இயந்திரங்களை (EVM) அறிமுகப்படுத்தல்.

## நடைமுறையிலுள்ள வைப்புப் பணத்தொகைகளைத் திருத்துவதற்கான யோசனைகள்

அனைத்து தேர்தல்/வாக்கெடுப்பு சட்டங்களில் குறிப்பிடப்படும் வைப்புப் பணத்தொகைகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பது குறித்த சட்டங்கள் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டின் மட்டத்திற்கு இணையாகவே. போட்டியிடும் கட்சிகள்/வேட்பாளர் எண்ணிக்கை அதிகரிப்பின்படி தேர்தல் முகாமைத்துவத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தணிப்பதற்கு தற்காலத்திற்கு ஏற்ற விதத்தில் வைப்புப் பணத்தொகைகளைத் திருத்துவது குறித்து பரிசீலித்தல்.

## வைப்புப்பணம் செலுத்தும் காலப்பகுதிகளைத் திருத்துதல்

நிருவாக மற்றும் நியதிச்சட்ட விடயங்களின் அடிப்படையில் இக்கருமங்களை பெரிதும் வசதிப்படுத்தும் பொருட்டு வைப்புப்பணம் ஏற்றுக்கொள்ளும் காலப்பகுதிகளைத் திருத்துதல்.

## வேட்புமனு நடைமுறைக்குரிய திகதிகளைத் திருத்துதல்

கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் வேட்புமனுக்களைக் கையளிக்கும்போது சுமார் 95% வீதமானவர்கள் கடைசி இரண்டு நாட் காலப்பகுதியிலேயே அறிக்கையிட்டுள்ளனர். ஆகவே இதற்காக

தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கையை 3 நாட்களுடன் மட்டுப்படுத்துவதும் 4வது நாள் ஒன்றைக் குறித்து தெரிவத்தாட்சி அலுவலரின் முடிவுகளை அறிவிப்பதற்கு அத்திகதியை ஒதுக்குதல்.

- **வேட்பாளர்களின் தகைமையீனங்கள்**

வேட்பாளர்கள் தகைமையீனமொன்றுக்கு உட்படவில்லை என்றொரு சத்தியப் பிரமாணத்தைப் பெற்றுக்கொள்வதும் அதன்படி அவர் தகைமையீனம் ஒன்றுக்கு உட்படுவாராயின் சம்பந்தப்பட்ட நபரின் மாத்திரம் வேட்புமனுவை நிராகரித்தல், உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தெரிவித்து பதவிகளை பெற்றுக்கொண்டிருப்பின் உரிய விசாரணையொன்றை அடுத்து அப்பதவிகளிலிருந்து நீக்குதல்.

- **அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்கும் நாட்களைத் திருத்துதல்**

முன்அனுபவங்களின் படி பல்வேறு வேளைக்கேற்ற விடயங்கள் காரணமாக அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் கையேற்கும் நாட்கள் இடைக்கிடை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆகையால் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை கையேற்பதை இக்காலப்பகுதியை கடைசித் திகதிக்கு பிந்திய திகதி வரை திருத்துதல்.

- **வாக்காளரைப் பரீட்சித்தலும் தோதான இலச்சினையை அடையாளமிடும் முறையை திருத்துதலும்**

புகைப்படம் அடங்கிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டிருப்பதால், இச்செயன்முறையை தொடர்ந்தும் மேற்கொள்வது நடைமுறைச் சாத்தியமானதா? என்பதைப் பரிசீலித்தல்.

- **உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகம்**

இது சம்பந்தாக தற்போது காணப்படும் முறைமைக்கு அதிக செலவும் மனித உழைப்பும் செலவாவதால் மிகவும் வசதியான, குறைந்த செலவுள்ள மாற்றுமுறைகள் மீது கவனம் செலுத்துவதன் முக்கியத்துவம்.

- **வாக்கெடுப்பு முடிவடையும் நேரத்தில் வரிசையில் காத்திருக்கும் அனைவருக்கும் வாக்களிப்பதற்கு வாய்ப்பளித்தல் பற்றிய யோசனை**

பல்வேறு சிரமங்கள் காரணமாக வாக்களிப்பதற்கு உரிய நேரம் முடிவடைவதற்குள் வரிசையில் இணைந்து கொண்ட அனைவருக்கும் வாக்களிப்பதற்கு வாய்ப்பளித்தல்.

- **தேர்தல் பிணக்கு முகாமைத்துவமும் சட்ட அமுலாக்கலுக்குரிய திருத்தங்களும்**

சுதந்திரமானதும், நீதியானதுமான ஒரு தேர்தலுக்கான பொறிமுறையைப் பலப்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு தேர்தல் தவறுகள் சம்பந்தமான வழக்குகளைத் தாக்கல்செய்யும் அதிகாரத்தை வழங்குதலும் பொலிசாருக்கு தற்போது வலுவிலுள்ள சட்டத்தின் கீழ் காணப்படும் அதிகாரங்களை மேலும் விஸ்தரித்தலும்.

- **தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை அறிமுகப்படுத்துதல்**

கட்சிகள்/வேட்பாளர்களினால் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு பாரிய தொகைப் பணத்தைச் செலவிட்டு பிரசார அனுகூலம் மூலம் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்படுவதை தடுக்கும் பொருட்டு தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள, சட்டமா அதிபரும் ஒருப்பாட்டைத் தெரிவித்துள்ள தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்துவற்கான சட்டமூலத்தை ஒரு சட்டமாக நிறைவேற்றுதல் அல்லது குறைந்தபட்சம் வேறு மாற்றுச் செலவுக் கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்துவதற்காக சட்டங்களை திருத்துவதும் இன்றியமையாதமையாததாக உள்ளமை.

- **பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தைப் பலப்படுத்துதல்.**

நாட்டின் ஆட்சியில் பங்குகொள்வதற்கு இளைஞர்களினதும் பெண்களிதும் பிரதிநிதித்துவத்திற்கு குறித்த ஒரு சதவீதத்தை வழங்குவதற்கு அவசியமான சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்தல்.

- **சுதந்திரமான அரசியல் வான் பிரசார மற்றும் தொலைக்காட்சி பிரசாரத்தை வழங்குதல்.**

சனாதிபதித் தேர்தல்கள் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டங்களில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய அரச ஊடகங்களுக்கு மாத்திரம் அமுல்படுத்தப்படும் இச்சட்டத்தினூடாக குறித்த அரச நிறுவனங்களின் நிதி நிலைமைக்கு பாதகமான தாக்கங்கள் ஏற்படுத்தப்படுவதால் அச்சட்டங்களை உகந்த முறையில் திருத்தத்திற்கு உட்படுத்துதல். '

- **ஊடக வழிகாட்டிநெறிகளை செயல்வலுப்படுத்தல்**

சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதில் ஊடகங்களினால் ஏற்படுத்தப்படும் செல்வாக்கை குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. ஆகையால் ஊடக சுதந்திரத்திற்கு தடங்கல் ஏற்படாதவாறு தேர்தல் காலப்பகுதியில் ஊடக வழிகாட்டிநெறிகளை செயல்வலுப்படுத்துவதற்கு தேவையான சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்துதலும் அவற்றை செயல்வலுப்படுத்தலும்.

- **தேர்தல் காலப்பகுதியில் பிரசார நடவடிக்கைகள்**

தேர்தல் காலப்பகுதியில் ஊடக நிறுவனங்கள் கட்சி/ வேட்பாளர் பிரசாரத்திற்காக அறவிடும் தொகைளை அளவு கடந்து அதிகரிப்பதாக கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. தற்போது காணப்படும் பிரசார முறைமைகளையும் சட்டங்களையும் தற்காலத்திற்கு ஏற்றவாறு திருத்துதல்.

- **அரச வளங்களின் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்குரிய யோசனைகள்**

யாதெனுமொரு கட்சி அல்லது வேட்பாளரை ஊக்கப்படுத்த அல்லது பாதிப்படையச் செய்யும் வகையில் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலுக்கு இடையூறாக அமைவதால் அது சம்பந்தமாக வெளியிடப்படும் பணிப்புகளை மீறுவது இலங்கை அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்குப் புறம்பான ஒரு தேர்தல் குற்றமாகவும் கருதி தேர்தல் சட்டத்தின் கீழ் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துதல்.

- **சொத்துக்கள், பொறுப்புக்களின் வெளிப்படுத்துகையை கட்டாயமாக்குதல்**

வேட்பாளர்களின் சொத்துக்கள்/ பொறுப்புக்களின் வெளிப்படுத்தலை வேட்புமனுப் பத்திரத்துடன் ஒப்படைப்பதைக் கட்டாயமாக்குவதும் அதனூடாக பின்னொரு சந்தர்ப்பத்தில் தவறுகள் அல்லது உண்மைக்கு புறம்பான தகவல்கள் முன்வைக்கப்படுவதை தடுத்தலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருப்பின் அத்தகைய ஆட்களுக்கு பதவி வறிதாகக்கூடிய விதத்திலும் தேர்தல் சட்டத்தின் கீழ் அத்தகைய ஆட்களுக்கெதிராக செயலாற்றுவதற்கும் சட்டங்களை ஆக்குதலும்.

பக்கம் 11...

# தேர்தல்
# ஒரு குறை–கலாசாரமொன்றுக்காக
# அல்ல பிரதிநிதித்துவத் தெரிவின் நற்-கலாசாரமொன்றுக்காக

**தம்ம திசாநாயக்க**
முதுநிலை விரிவுரையாளர்
அரசியல் விஞ்ஞானம் மற்றும் அரச கொள்கைகள் கற்கைப் பிரிவு – கொழும்புப் பல்கலைக்கழகம்

நீண்டகால இந்நாட்டின் தேர்தல் செயன்முறை பற்றி கவனம் செலுத்தும்போது நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டதிட்டங்களில் திருத்தம் கொண்டுவருதல் மிக முக்கிய ஒரு தேவைப்பாடாகக் காணப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், பல்வேறு தரப்புக் குழுக்களிடமிருந்தும் தேர்தல் சட்டத் திருத்தங்களுக்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. நடைமுறை நிலைமையைக் கவனத்திலெடுத்த தேர்தல் ஆணைக்குழு குறித்த சட்டதிட்டங்களைத் திருத்துமாறு அரசாங்கத்தைக் கோரியிருந்தது.

தேர்தல் மற்றும் வாக்கெடுப்புக் கட்டமைப்பிலும் சட்டதிட்டங்களிலும் மறுசீரமைப்புகளை அடையாளம் காண்பதற்கும், அது சம்பந்தமாக தேவையான திருத்தங்களை முன்வைப்பதற்குமான விசேட செயற்குழுவொன்று ஏற்கனவே நியமிக்கப்பட்டு அக்குழு அந்நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. 2021 ஏப்ரல் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையொன்றின் அடிப்படையிலேயே இச்செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு 2006 ஏப்ரல் 4 ஆம் திகதியன்றும் தேர்தல் மறுசீரமைப்புப் பற்றிய பாராளுமன்ற விசேட செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதன் இடைக்கால அறிக்கை 2007 ஜூன் 5 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதற்கு முன்பு 2003 ஆகஸ்ட் 20 ஆம் திகதி பாராளுமன்ற பிரேரணையொன்றின் மூலம் தேர்தல் மறுசீரமைப்பு பற்றிய விசேட செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் இடைக்கால அறிக்கை 2004 சனவரி 23 ஆம் திகதி அச்சுப் பணிக்காக ஒப்படைக்கப்பட்டது.

இம்மூன்று செயற்குழுக்களிலும் சில விசேட பண்புகளைக் காணக்கூடியதாக இருந்தது. திரு. தினேஷ் குணவர்தன அவர்கள் மூன்று செயற்குழுக்களிலும் தவிசாளர் பதவியை வகிப்பது அவற்றிலொன்றாகும். மூன்று செயற்குழுக்களும் தேர்தல் மறுசீரமைப்பை நோக்காகக்கொண்டு மாத்திரம் நியமிக்கப்பட்டிருப்பது மற்றொரு சிறப்பம்சமாகும். மூன்று செயற்குழுக்களும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மூலக்கோட்பாடுகளின் அடிப்படையில் அமையாமல் பிரதிநிதித்துவத் தெரிவு தொடர்பான நுட்ப விடயங்கள் குறித்து மாத்திரம் கவனம் செலுத்தியமை அடுத்த சிறப்பம்சமாகும். மற்றைய சிறப்பம்சம் யாதெனில், சிவில் சமூக அமைப்புக்கள் அல்லது அரசியல் கட்சிகள் எவற்றினாலும் நாட்டின் பிரதிநிதித்துவ சனநாயகத்தின் ஓர் ஊடகம் மாத்திரமேயான பிரதிநிதித்துவ தெரிவு முறையின் நுட்பங்கள் பற்றி பேசப்படுவதற்கு அப்பால் சென்ற பிரதிநிதித்துவ சனநாயக அம்சங்களின் பரிமாணங்களின் அடிப்படையிலான முன்மொழிவுகளை முன்வைக்காமையும் அது பற்றிய கருத்தாடலொன்றை ஆரம்பிக்காமையுமே ஆகும். "இம்முறை எமது பலத்தைக் காட்டுவோம்" ("මෙදා පොටේ දෙනව බැටේ") என்ற பாணியிலான தேர்தல் குறை–கலாசாரமொன்றன்றி விருத்தியடைந்ததும் உள்ளார்த்தத்துடன் கூடியதுமான பிரதிநிதித்துவ ஜனநாயக கலாசாமொன்றுக்கான கருத்துருக்கள் மீதும் தொனிப்பொருளொன்றுடன் கூடிய கலாசாரமொன்றின் மீதும் எவரும் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பதே இதிலிருந்து புலப்படும் விடயமாகும்.

யாவரும் பிரயோகிக்கின்ற "தேர்தல்" என்ற பிரயோகத்திற்குப் பதிலாக இக்கட்டுரையில் "பிரதிநிதிகள் தெரிவு" என்ற பதத்தை நான் எடுத்தாள்வது எதன் காரணமாக என்பது குறித்து விளக்கமளிக்க வேண்டும் என்றெண்ணுகின்றேன். பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை நாம் விரும்புகின்றோமாயின் நாம் அதாவது பொது மக்கள் தெரிவுசெய்ய வேண்டியது, எமக்கு மேலேயுள்ள பிரபுத்துவ அணியினரையல்ல மாறாக எமக்கு சமமான மக்கள் பிரதிநிதிகளையே ஆகும். அதன் காரணமாக தேர்தலையல்ல மாறாக பிரதிநிதித்துவ தெரிவே நடாத்தப்படல் வேண்டும். சொல்லார்த்தம் பற்றிக் கூட இந்தளவுக்குக் கவனம் செலுத்த வேண்டியிருப்பது, 1931 இல் எமது கைக்கெட்டியது, ஆட்சியாளர்களை அல்லது பிரபுத்துவ அணியினரை சிம்மாசனத்தில் வீற்றிருக்கச்செய்வதற்கான ஒரு மாயாஜாலக் கோலன்றி பிரதிநிதித்துவ ஜனநாயக கலாசாரமொன்றை அமைத்துக்கொள்வதற்கான வாக்குரிமையே என்பதனாலாகும். அதனைப் பயன்படுத்தி ஆட்சியாளர்களை அல்லது பிரபுத்துவ அணியினரையன்றி மக்கள் பிரதிநிதிகளையே நாம் தெரிவுசெய்தல் வேண்டும். அவ்வாறு பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் முறையை நாம் அழைக்க வேண்டியது பிரதிநிதித்துவ தெரிவுமுறை என்றே ஒழிய தேர்தல் எனவல்ல. அவ்வாறான கூரிய விமர்சன ரீதியான பிரயோகமொன்றின் மூலமே நாம் அதனை ஆரம்பிக்க வேண்டும்.

மீண்டும் தொடக்க விடயத்துக்கு வருவோம். 2003 தொடக்கம் இன்று வரையான "தேர்தல் செயற்குழுக்கள்" அல்லது ஏனைய சம்பந்தப்பட்ட தரப்புக்கள் பிரதிநிதித்துவக் கோட்பாடு அதன் முக்கியத்துவம், பிரதிநிதித்துவ ஜனநாயகமும் அதன் சமூக, அரசியல் பொருளாதார நகர்வுகளின் ஆற்றலும் இயல்திறனும் குறித்து கவனம் செலுத்தாமையும் வெறுமனே "தேர்தல் மறுசீரமைப்பு" தொடர்பாக மாத்திரமே கவனம் செலுத்துவதன் ஊடாக நாட்டுக்கு குறை வளர்ச்சியையும், குறை கலாசார பண்பினையும் கொண்ட பிரதேச, மாகாண, தேசிய பிரதிநிதித்துவ நிறுவனங்களே ஆகும். பெரும்பாலும் பிரதிநிதிகளாகவன்றி தான்தோன்றித்தனமாக நடந்துகொள்கின்ற பிரதேச, மாகாண, தேசிய மட்ட ஆட்சியாளர்கள், வன்முறையாளர்கள் மற்றும் ஊழல்வாதிகளேயாவர். ஆகையால், இம்முறையாவது நாம் இச்செயற்குழுவை ஆட்சியாளர்களையன்றி பிரதிநிதிகளுடன்கூடிய பிரதிநிதித்துவ ஜனநாயக கலாசாரமொன்றை ஊக்குவிக்கின்ற மறுசீரமைப்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் திசையை நோக்கியே வழிநடாத்துதல் வேண்டும். பிரதிநிதித்துவ தெரிவின் மூலம் பிரதிநிதித்துவக் கோட்பாடுகளையும் நிறுவனங்களின் தலைவிதியையும் நிர்ணயிப்பதற்குப் பதிலாக பிரதிநிதித்துவ ஜனநாயக கோட்பாடுகள் மூலம் பிரதிநிதித்துவ தெரிவுகளின் வடிவத்தையும் செயற்பாட்டையும் தீர்மானிக்கும் இடத்திற்கு நாம் சென்றாதல் வேண்டும்.

பிரதிநிதித்துவ ஜனநாயக சமூகமொன்றின் ஓர் அடிப்படைப் பண்பாக அமைய வேண்டியது, அதற்குரிய முறையான, மனிதாபிமான சமூக கலாசாரமொன்றுக்கு உதவும் ஓர் அரசியலமைப்பை உருவாக்கிக்கொண்டு அதன்படி ஆட்சி செய்வதாகும். அதன்போது ஜனநாயகத்திற்கும் அதன் வழிமுறைக்கும் அரசியலமைப்புக்கு முரணான விதத்தில் தடங்கல்களை ஏற்படுத்துவதும் அரசியலமைப்புக்குட்பட்ட வகையிலான தடங்கல்களை ஏற்படுத்துவதும் ஆகிய இரண்டுமே தவறாகும். அதேபோல் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மதிப்பீடுகளைப் பொருட்படுத்தாமலும் அவற்றைத் தவற விட்டும் பல்வேறு திருத்தங்களைக் கொண்டுவருவதும் தவறாகும். அரசியலமைப்பையும் ஏனைய சட்டங்களையும் நிறுவனங்களையும் துஷ்பிரயோகம்செய்வதும்

தவறாகும். இந்நிலையைத் தவிர்த்துக்கொள்வதாயின், எப்பொழுதும் எல்லாக் கருமங்களிலும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மூலக்கோட்பாடுகள், சித்தாந்தங்கள் என்பவற்றின் மீது நிறுவி அவற்றை அடிப்படையாகக்கொண்டு நாம் செயலாற்றுதல் வேண்டும்.

நவீன சமூக சூழமைவில் ஜனநாயகம் மற்றும் பிரதிநிதித்துவம் என்பது ஒரு மனித உரிமையாகும். அதேபோல் ஜனநாயக அரசாங்கங்களும் ஆட்சியொன்றை முன்னெடுத்துச் செல்வதும் மக்களின் ஓர் உரிமையாகும். சமூகமொன்றில் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக ஜனநாயகம் இன்றியமையாத ஒரு நிபந்தனையாக இருப்பதன் காரணமாகவே அவ்வாறு காணப்படுகின்றது. நவீன சமூகத்தில் ஜனநாயகம் அமுல்படுத்தப்படுவது பிரதிநிதித்துவ முறைகளின் ஊடாகவேயாகும். அது பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. ஆகையால், பிரதிநிதித்துவ முறைகளும் பிரதிநிதித்துவ தெரிவுகளும் ஒழுங்கமைய வேண்டியது அப்பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் நோக்கங்களதும் விழுமியங்களதும் அடிப்படையிலேயே ஆகும். அவ்வாறன்றி எவருமே பிரதிநிதித்துவ நிறுவனமொன்றுக்கு நியமனம் செய்யப்படுவது எந்த எளிய முறையொன்றின் கீழ், எவ்வாறு என்ற விடயங்களின் அடிப்படையிலல்ல. மனித உரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரத்திற்கும் மதிப்பளித்தல், சுதந்திரமானதும் நீதியானதுமான பிரதிநிதித்துவ தெரிவுகளை நடாத்துதல், அரசியல் கட்சிகளிலும் அமைப்புகளிலும் பல்லினப் பண்புகள் விரவிக் காணப்படுதல் அதாவது தத்துவங்கள் உரிய முறையில் வலுவேறாக்கம் செய்யப்பட்டிருத்தல் அரசாங்க நிறுவனங்களின் சுயாதீனத்தன்மை, கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் என்பவற்றிற்கு அரசாங்கங்களினால் அல்லது ஊடகக் கம்பனிகளினால் தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டிராமை, சட்டரீதியாக நிறுவப்பட்டுள்ள சிவில் அதாவது பிரசைகள் அதிகார பீடத்திற்கு அனைத்து அரச நிறுவனங்களும் கீழ்ப்படிதல் என்பன அவ்வாறான சில பெறுமானங்களாகும்.

பிரதிநிதித்துவத் தெரிவு என்பது பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கான ஓர் ஊடகம் மாத்திரமன்றி, ஒரே ஊடகமல்ல என்பதை நாம் புரிந்துகொள்ளல் வேண்டும். மக்கள் தீர்ப்புக்கள், தொடக்கநிலை மற்றும் திருப்பி அழைத்தல் என்பன ஏனைய முறைகளாகும். மாகாண, பிரதேச, சமுதாய மட்டம் வரை பிரதிநிதித்துவ கலாசாரத்தை விஸ்தரித்தலும் உள்ளார்த்த பிரதிநிதித்துவ ஜனநாயக கலாசாரமொன்றை சமூகத்தில் உறுதிசெய்வதற்கு பல்வேறு முறைகளைக் கையாள வேண்டியுள்ளது. அதேபோல் பிரதிநிதித்துவ முறைமைகளை நுணுக்கமாக்கிக்கொள்வதனூடாக மாத்திரம் விருத்தியடைந்த ஜனநாயக சமூக கலாசாரமொன்றை உருவாக்கிக்கொள்ள முடியாது. ஜனநாயகத்திற்கு நடபடிமுறை சார்ந்த முறைமைகள் அவசியமென்பது உண்மையாகும். இருப்பினும், உள்ளார்ந்த விழுமியங்கள் இன்றேல் அத்தகைய நடபடி முறைகளினால் கிடைக்கப்போகும் பாரிய பெறுபேறுகள் எவை? நடபடி முறைகளைக் கட்டியெழுப்பிக்கொள்ள வேண்டியது உள்ளார்த்தங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே ஒழிய, நடபடி முறைகளினால் நின்று போய்விட வேண்டுமென்பதற்காகவல்ல

உள்ளர்த்த விட்டு விலகிய, சிதறிப்போன, ஒருங்கிணையாத நடபடி முறைகளை நாளாந்தம் அதிகாரத் தேவைகளுக்கு ஒழுங்கமைத்துக்கொள்வதற்கே இந்நாட்டின் அரசாங்கங்கள் தொடர்ந்து முயற்சித்துள்ளன. அறிவை உருவாக்குவதை அடிப்படையாகக்கொள்ளாத கல்வி நடபடி முறைகள் எவ்வாறு பயனற்றுப்போகுமோ ஜனநாயகம் மற்றும் பிரதிநிதித்துவ ஜனநாயக சித்தாந்தங்கள் சார் அம்சங்களையும் நோக்கங்களையும் அடைந்துகொள்ள முற்படாத "தேர்தல்" நடபடி முறைகளும் பயனற்றவை என்பதை தேர்தல்கள் மற்றும் வாக்கெடுப்புகளின் கட்டமைப்பிலும் சட்டதிட்டங்களிலும் மறுசீரமைப்புகளை அடையாளம் காண்பதற்கும், அவை குறித்து தேவையான திருத்தங்களை முன்வைப்பதற்குமான விசேட செயற்குழு கட்டாயமாகப் புரிந்துகொள்ளல் வேண்டும். அவ்வாறல்லாதபட்சத்தில், இந்நாட்டில் "இம்முறை எமது பலத்தைக் காட்டுவோம்" என்ற தோரணையிலான தேர்தல்கள் தொடர்ந்தும் நிலவி வருமே ஒழிய, பிரதிநிதித்துவ சித்தாந்தங்களின் மீது நாட்டைக் கட்டியெழுப்பி மக்களுக்கு மகிழ்ச்சியான, கௌரவமான வாழ்வொன்றை வழங்குகின்ற உள்ளார்ந்த ஜனநாயக கலாசாரமொன்றல்ல. ஆகையால், தேர்தல் சட்டத் திருத்தம் மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவின் முக்கிய கவனம் என்னால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களின் மீது ஈர்க்கப்படுமென எதிர்பார்க்கின்றேன்.

## தேர்தல் மாவட்ட மற்றும் நிருவாக மாவட்ட வாரியாக பதிவுசெய்துகொண்டுள்ள தேருநர்களின் எண்ணிக்கை

| தேர்தல் மாவட்டமும் நிருவாக மாவட்டமும் | தேருநர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2020 | 2021 |
| கொழும்பு | 1,724,061 | 1,735,294 |
| கம்பஹா | 1,804,102 | 1,814,507 |
| களுத்துறை | 981,364 | 985,948 |
| கண்டி | 1,140,168 | 1,151,796 |
| மாத்தளை | 413,096 | 416,249 |
| நுவரெலியா | 583,566 | 586,089 |
| காலி | 876,391 | 879,992 |
| மாத்தறை | 664,030 | 667,904 |
| அம்பாந்தோட்டை | 499,586 | 503,184 |
| யாழ்ப்பாணம் | 563,193 | 572,446 |
| யாழ்ப்பாணம் மாவட்டம் | 469,822 | 476,792 |
| கிளிநொச்சி மாவட்டம் | 93,371 | 95,654 |
| வன்னி | 290,169 | 293,682 |
| வவுனியா மாவட்டம் | 123,785 | 124,735 |
| மன்னார் மாவட்டம் | 85,948 | 86,879 |
| முல்லைத்தீவு மாவட்டம் | 80,436 | 82,068 |
| மட்டக்களப்பு | 419,345 | 427,125 |
| அம்பாறை | 523,148 | 529,045 |
| திருகோணமலை | 293,607 | 297,946 |
| குருநாகல் | 1,360,627 | 1,375,457 |
| புத்தளம் | 628,640 | 637,009 |
| அநுராதபுரம் | 701,827 | 710,248 |
| பொலனறுவை | 336,701 | 339,428 |
| பதுளை | 675,924 | 680,892 |
| மொணராகலை | 377,688 | 381,252 |
| இரத்தினபுரி | 888,722 | 895,994 |
| கேகாலை | 690,101 | 694,188 |
| குறைநிரப்பு பட்டியல் | 3 | – |
| **முழு மொத்தம்** | **16,436,059** | **16,575,625** |

# FEMBoSA

## தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் மன்றம்



**சி. அச்சுதன்**
*பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்*
*உள்ளூராட்சி தேர்தல்கள் பிரிவு – விசேட கருத்திட்டங்கள் இலங்கை தேர்தல் ஆணைக்குழு*

சார்க் (SAARC) நாடுகளின் தேர்தல் முகாமை அமைப்புக்களின் முதலாவது கூட்டம் 2010 ஆம் ஆண்டு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்றபோது தெற்காசிய பிராந்திய தேர்தல் முகாமை அமைப்புக்களை ஒன்றிணைத்து நிறுவனமொன்று அமைக்கப்பட வேண்டுமென்று தேர்தல் முகாமை அமைப்புக்களின் தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்த வகையில் இது தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் மன்றம் என்று பெயரிடப்பட்டு 2010 ஆம் ஆண்டு பங்களாதேஷில் நடைபெற்ற கூட்டம் இம்மன்றத்தின் முதலாவது வருடாந்த மாநாடாக பதிவு செய்யப்பட்டது.

இம்மன்றத்தின் உறுப்பினர்களாக ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவுகள், நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளின் தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்கள் காணப்படுகின்றன.

தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் மன்றம் ஜனநாயக நாடுகள் பலவற்றினை தன்னகத்தே கொண்டதாக அமைந்துள்ள அதேவேளை, தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களிடையே பன்முகப்படுத்தப்பட்ட ஒத்துழைப்பை பலப்படுத்துவதுடன் அனுபவங்களை பகிர்ந்துகொள்வதையும் நோக்காக கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு தேர்தல் முகாமைத்துவ அமைப்பும் ஏனைய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் அனுபவங்களூடாக சிறந்த பட்டறிவைப் பெற்றுக்கொள்வதற்கு இவ்வமைப்பு பயனுள்ளதாக காணப்படுகின்றது.

இவ்வமைப்பின் உருவாக்கத்தின் விளைவாக உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தத்தமது நாடுகளில் தேசிய வாக்காளர் தினத்தை ஆண்டு தோறும் கொண்டாடி வருகின்றன. மேலும் சனநாயகம் மற்றும் தேர்தல் ஆய்வுகளுக்கான தெற்காசிய நிறுவனம் (South Asia Institute for Democracy and Electoral Studies- SAIDES) நேபாளத்தில் உருவாக்கப்பட்டமை, இவ்வலய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களிடையே சிறந்த ஒத்துழைப்பு உருவாகியமை மற்றும் உறுப்பு நாடுகளின் கல்வித் திட்டத்தில் தேர்தல் முறைமைகள் தொடர்பான பாட விதானங்கள் உள்வாங்கப்பட்டமை இவ்வமைப்பின் உருவாக்கத்தின் முக்கிய விளைவுகளாகக் குறிப்பிடலாம். மிகமுக்கியமாக அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அதாவது வீடுகளற்றோர், விசேட தேவையுடையோர், வயதில் மூத்தவர்கள், பிற்படுத்தப்பட்ட சமூகத்தவர் அனைவரையும் உள்ளடக்கிய தேர்தல் முறைமையொன்றை (All-inclusive elections) உருவாக்குவது தொடர்பில் உறுப்பு நாடுகளின் தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்கள் முயற்சித்து வருகின்றன. இவற்றைவிட குறித்த ஓர் உறுப்பு நாட்டில் தேர்தலொன்று நடைபெறுகின்ற போது, ஏனைய உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை தேர்தல் கண்காணிப்புகளிலும் தேர்தல் ஆய்வு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்துவதனூடாக பரஸ்பர ஒத்துழைப்பு பரிமாறலை மேம்படுத்தல் மற்றும் தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்குதல் போன்றன வழமையாக நடைபெற்று வருகின்றன.

தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் மன்றத்தின் கூட்டத் தொடர்களின் நிகழ்ச்சி நிரலானது, பொதுவாக பிராந்தியத்தில் சமகாலத்தில் நிலவுகின்ற தேர்தல் முகாமைத்துவம் மற்றும் தேர்தல் நடைமுறையுடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதாக அமைவதுடன், குறித்த வருடத்திற்கான தலைமைத்துவத்தை அந்த ஆண்டில் மாநாட்டினை ஒழுங்கு செய்து நடாத்துகின்ற நாட்டின் தேர்தல் முகாமைத்துவ அமைப்பிற்கு கையளித்தல், அடுத்த ஆண்டில் எந்த நாட்டில் மாநாட்டை நடாத்துவது மற்றும் அடுத்த கூட்டத் தொடருக்கான கருப்பொருளை தீர்மானிப்பது போன்ற விடயங்களை உள்ளடக்கியிருக்கும். மேலும் முன்னைய ஆண்டில் இவ்வமைப்பின் செயற்பாடுகளின் முன்னேற்றம் பற்றி ஆராய்ந்து பார்த்தல் மற்றும் அடுத்த ஆண்டிற்கான செயற்பாடுகளை திட்டமிடுதல் போன்ற விடயதானங்களும் நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்படும் விடயங்களாகும்.

2013 ஆம் ஆண்டு திம்புவில் நடைபெற்ற நான்காவது வருடாந்த கூட்டத்தின் போது பங்களாதேஷ் தேர்தல் ஆணைக்குழுவினால் இம்மன்றத்திற்கான இலச்சினையொன்று முன்மொழியப்பட்டு அது அனைத்து உறுப்பு நாடுகளினாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் இம்மன்றத்திற்கான இலச்சினை அங்கீகரிக்கப்பட்டது.

இவ்விலச்சினையில் காணப்படும் ✓ அடையாளம் தேர்தலையும் 8 தங்க முத்துக்களும் 8 உறுப்பு நாடுகளையும் தங்கமுத்துக்களிடையே காணப்படுகின்ற சமமான இடைவெளிகள் பக்கச்சார்பற்ற ஜனநாயகத்தையும் முத்துக்களிடையே காணப்படுகின்ற வெற்றிடங்கள் வெளிப்படைத் தன்மையையும் முத்துக்கள் வட்டவடிவில் அமைந்துள்ளமை ஒத்துழைப்பையும் குறித்து நிற்கின்றது.

தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் மன்றத்தின் தலைமைத்துவம் உறுப்பு நாடுகளிடையே சுழற்சி முறையில் பரிமாறிக் கொள்ளப்படுகின்றது. வருடாந்த கூட்டத்தொடரை தலைமையேற்று நடாத்துகின்ற நாடு அவ்வாண்டிற்கான தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். அந்த வகையில் வருடாந்த கூட்டத்தொடர் நடைபெற்ற நாடுகளின் விபரங்கள் பின்வருமாறு.

### 1 வது கூட்டத் தொடர்
பங்களாதேஷ்
29 – 30 மே 2010

### 2 வது கூட்டத் தொடர்
பாகிஸ்தான்
08 – 10 செப்டம்பர், 2011

### 3 வது கூட்டத் தொடர்
இந்தியா
ஏப்ரல் 30 – மே 02, 2012

## 4 வது கூட்டத் தொடர்

பூட்டான்

01 – 03 ஒக்ரோபர், 2013

தெற்காசியப் பிராந்தியத்தின் சிறந்த தேர்தல் முறைமைகளுக்காக அனுபவங்களையும் வளங்களையும் பகிர்ந்து கொள்ளல்

(Sharing Experiences and Resources for Better Electoral Practices in South Asia)

## 5 வது கூட்டத் தொடர்

நேபாளம்

29 – 30 நவம்பர், 2014

பிரச்சார நிதியை ஒழுங்குபடுத்துதல்: சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை உறுதி செய்தல்.

(Regulating Campaign Finance, Ensuring and Fair Election)




## 6 வது கூட்டத் தொடர்

இலங்கை

01 – 02 ஒக்ரோபர், 2015

சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதிசெய்வதற்கு தேர்தல் முகாமை அமைப்புக்களின் சுயாதீனம் மற்றும் சுதந்திரம்.

(Autonomy and Independence of EMBs for ensuring free and fair elections)



## 7 வது கூட்டத் தொடர்

மாலைதீவுகள்

02 – 04 ஓகஸ்ட், 2016

நம்பகத்தன்மையான தேர்தல்களுக்கான தொழில்நுட்பம்

(Technology for credible Elections)



## 8 வது கூட்டத் தொடர்

ஆப்கானிஸ்தான்

24 – 26 செப்ரம்பர், 2017

தேர்தல்கள் மற்றும் பிணக்குகளைத் தீர்த்தலும் எந்தவொரு வாக்காளரும் விடுபடாமையும்.

(Election and Dispute Resolution & No Voter to be Left Behind)




## 9 வது கூட்டத் தொடர்

பங்களாதேஷ்

05 – 07 செப்ரம்பர், 2018

1. தேர்தல் நடைமுறைகளில் வெளிப்படைத் தன்மை
(Transparency in electoral process)
2. தேர்தல் நடைமுறைகளில் பங்கீடுபாட்டாளர்களை ஈடுபடுத்தல்
(Emgaging electoral stakeholders)



## 10 வது கூட்டத் தொடர்

இந்தியா

24 ஜனவரி, 2020

நிறுவன இயலுமையை வலுப்படுத்தல்

(Strengthening Institutional Capacity)



## 11 வது கூட்டத் தொடர்

(மெய்நிகர் இணையவழி கூட்டத் தொடர்)

பூட்டான்

11 ஓகஸ்ட், 2021

தேர்தல் முறைமைகளில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு

(Use of Technology in Election)



2019 ஆம் ஆண்டில் நடாத்தப்படவேண்டிய கூட்டத்தொடர் பல்வேறு காரணங்களினால் நடாத்தப்படாமல் 24 சனவரி 2020 அன்று புதுடில்லியில் 10வது கூட்டத்தொடர் நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2021ஆம் ஆண்டு முற்பகுதியில் நடாத்தப்பட வேண்டிய 11வது கூட்டத்தொடர் கொரோனா பெருந்தொற்று காரணமாக பிற்போடப்பட்டு 2021 ஆகஸ்ட் மாதம் 11 ஆந் தேதி இணைய வழியூடாக மெய்நிகர் கூட்டத்தொடராக பூட்டானினால் தலைமையேற்று நடாத்தப்பட்டது. மேலும் ஓராண்டு காலத்திற்கான தலைமை பதவி கொரோனா பெருந்தொற்று காரணமாகவும் உறுப்பு நாடுகளில் சிலவற்றில் தேர்தல்கள் எதிர்பார்க்கப்படுகின்றமையினாலும் இம்முறை பூட்டானிடம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 12வது கூட்டத்தொடர் 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

2020 ஆகஸ்ட் 11 ஆந் தேதி நடாத்தப்பட்ட 11வது கூட்டத்தொடர் "தேர்தல் முறைமைகளில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு" (Use of Technology in Elections) என்ற தலைப்பின் கீழ் நடாத்தப்பட்டது. இக் கூட்டத் தொடரில் "இலங்கையில் தேர்தல் காலங்களில் சமூக ஊடகங்கள் உட்பட ஊடகங்களை கண்காணிப்பதில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு" (Use of technology in monitoring media including social media in elections in Sri Lanka) என்ற தலைப்பில் இலங்கை தனது முன்வைப்புகளை சமர்ப்பித்திருந்தது.

ஊடகங்களை கண்காணிப்பதன் நோக்கம், தேர்தலொன்றிலே போட்டியிடுகின்ற அனைத்து தரப்பினருக்கும் சமமான சந்தர்ப்பமொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதும் குறிப்பிட்ட ஒரு கட்சியையோ அல்லது ஒரு வேட்பாளரையோ ஊக்குவிப்பதற்கு அல்லது பாதிப்பினை ஏற்படுத்துவதற்கு ஊடகங்கள் நேர்மையற்ற முறையில் பயன்படுத்தப்படுவதை கட்டுப்படுத்துவதுமாகும். மாறிவரும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ப தொலைக்காட்சி, வானொலி, அச்சு ஊடகங்கள், சமூக ஊடகங்கள் போன்றவற்றை கண்காணிப்பது சவால் மிகுந்த ஒரு பணியாகும். இலங்கையில் காணப்படக்கூடிய சுமார் 6 மில்லியன் குடியிருப்புக்களில் 4.8 மில்லியன் குடியிருப்புக்களில் தொலைக்காட்சி பயன்பாட்டிலுள்ளது. அதேவேளையில் சுமார் 40 வரையான தொலைக்காட்சி அலைவரிசைகளும் 8 கம்பி இணைப்பு மற்றும் செய்மதி தொலைக்காட்சி சேவைகளும் காணப்படுகின்றன. இலங்கையில் இணைய பாவனையாளர்கள் 11 மில்லியன் வரை காணப்படுகின்றனர். 7.7 மில்லியன் முகநூல் பாவனையாளர்களும், சுமார் 40 ற்கு மேற்பட்ட சேவை வழங்குநர்களினால் கையாளப்படுகின்ற சுமார் நூறு வரையிலான மும்மொழியிலுமான வானொலி அலைவரிசைகளும் முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேவையிலீடுபட்டு வருகின்றன. இவ்வாறான நிலையில் ஊடகங்களை தேர்தல் காலங்களில் கண்காணிப்பது என்பது சிக்கலான பணியாகும்.

கடந்த தேர்தல் காலங்களில் ஊடகங்களின் கண்காணிப்பில் இலங்கை தேர்தல் ஆணைக்குழு பெரும்பாலும் தொலைக்காட்சி செய்திகளை கண்காணிப்பதிலேயே கவனம் செலுத்தக் கூடிய ஏது நிலையைக் கொண்டிருந்தது. இதனை விட ஊடக ஒழுங்கு நெறிமுறையை வெளியிட்டு அதன் மூலம் ஊடகங்களை குறிப்பாக அரச ஊடகங்களை நெறிமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தியிருந்தது. அதேவேளை சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதில் முகநூல் மற்றும் யூ டியூப் நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றியிருந்ததுடன் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் ஒத்துழைப்பையும் பெற்றிருந்தது.

இலங்கையில் இறுதியாக நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் கொவிட் பெருந்தொற்று காலப்பகுதியில் நடைபெற்றதால் வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தமது கொள்கைகளை மக்களுக்கு வெளிப்படுத்துவதற்கு பொதுக்கூட்டங்களையோ அல்லது மக்கள் சந்திப்புக்களையோ நடாத்துவதற்கு கட்டுப்பாடுகள் காணப்பட்டன. இதற்கு மாற்று வழியாக அவர்கள் ஊடகங்களை நாடவேண்டியிருந்தமை ஒரு சவால் மிகுந்த சந்தர்ப்பமாகும். இவ்வாறான சவால் மிக்க தேர்தல் காலங்களில் ஊடகங்களைக் கண்காணிப்பதற்கு தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அறிவு போன்றவற்றையும் சட்ட ஏற்பாடுகளையும் தேர்தல் முகாமைத்துவ அமைப்புகள் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி 11வது தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் மன்றத்தின் கூட்டத்தொடரில் இலங்கை சமர்ப்பிப்புக்களை முன்வைத்திருந்தது.

தெற்காசிய தேர்தல் முகாமை அமைப்புக்களின் மன்றம் 2010 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதிலிருந்து இன்று வரை சார்க் நாடுகளிடையே தேர்தல் முகாமைத்துவத்தில் ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்பதிலும் உறுப்பு நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதிலும் சிறப்பாக செயற்படுகின்றதென்றால் அது மிகையாகாது.




FEMBoSA (தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் மன்றம்) இன் 11 ஆவது வருடாந்தக் கூட்டம் 11 ஆம் திகதி 2021.08.11 ZOOM தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடாத்தப்பட்ட நிகழ்வு.

# தேர்தல் வரலாற்றில் ஒளிக்கீற்று

# தேர்தல் இலஞ்சத்திற்கெதிரான மொணராகலை

## தேர்தல் மனு தொடர்பான வழக்கு

**ரோஹண ஹெட்டிஆரச்சி**
நிறைவேற்றுப் பணிப்பாளர் - சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (பவ்ரல்)

2018 ஆம் ஆண்டு பெப்பரவரி 10 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல், இலங்கையின் தேர்தல் வரலாற்றில் தீர்மானகரமாண ஒரு தேர்தலாகும். அவ்வாறு தீர்மானகரமானதாக அமைவதன் மீது தாக்கம் செலுத்திய முக்கிய சில விடயங்கள் உள்ளன. அவற்றில் முதன்மையானது 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல், தேர்தல் முறையில் புதிய திருத்தங்களுடன் நடைபெற்ற முதலாவது தேர்தல் என்பதாகும். இப்புதிய முறையின் மூலம் விகிதாசார அடிப்படையைக் கொண்ட ஒரு கலப்பு முறை அறிமுகம்செய்யப்பட்டது. அதேபோல் புதிய முறையின் மூலம் முதல் தடவையாக பெண் பிரதிநிதித்துவத்திற்கு 25% வீதமென்ற கட்டாய அனுமதிப்பங்கும் (கோட்டா) அறிமுகம்செய்யப்பட்டது. இந்த முறையுடன் எஞ்சிய இன்னும் ஏராளமான மாற்றங்கள் தேர்தல் முறையுடன் இணைந்து கொண்டன. இத்தேர்தலுக்குரிய 3வது முக்கிய விடயம் யாதெனில், தேர்தல் களமிறங்கும் வேட்பாளரொருவர் வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்குவதை சவாலுக்குட்படுத்தி மொணராகலை மேல் நீதிமன்றத்தின் முன்னிலையில் தாக்கல்செய்த வழக்கின் பயனாக சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரின் உறுப்பினர் பதவி வறிதாக்கப்பட்டது. குறித்த வழக்கு, அதற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் மற்றும் வழக்குத் தீர்ப்புடன் ஜனநாயக சமூகத்திற்கு கிடைத்துள்ள வெற்றி குறித்து அலசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வழக்கின் பின்னணி

வேறு பல தேர்தல்களிலும் 2018 உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலின் போதும் வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்கியமை சம்பந்தமான முறைப்பாடுகள். அனைத்து கண்காணிப்பு அமைப்புகளுக்கும் பெருகி வந்துகொண்டிருந்தன. அத்தகைய முறைப்பாடுகளிடையே மொணராகலை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் மதுறுகெட்டிய வாக்கெடுப்பு பிரிவுக்கு போட்டியிடும் வேட்பாளரொருவர் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் போது நம்ப முடியாதளவு தொகைப்பணத்தை பயன்படுத்தி பல்வேறு இலஞ்சங்களை வழங்கி வருவதாக அறிய கிடைத்தது. இவற்றிடையே வீடுகளுக்கு கூரைச் சாமான்கள், சீமெந்து உள்ளிட்ட கட்டிடப் பொருள்கள் சிறுவர் நிலையங்களுக்கு தேவைப்படும் உபகரணங்கள், மின்வசதியற்ற வீடுகளுக்கு மின்சாரத்தையும், நீர் வசதியற்ற வீடுகளுக்கு நீர் இணைப்புகளையும் வழங்கி வருதாக தகவல் கிடைத்தது. இது தொடர்பில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL), தேர்தல் வன்செயல் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகிய இரு நிறுவனங்களும் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தன. இதன் பயனாக கொழும்பிலிருந்து விசாரணை அதிகாரிகளை மொணராகலை பகுதிக்கு அனுப்பிவைத்து விசேட புலனாய்வொன்றை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது. இது சம்பந்தமாக மேலும் விடயங்களை ஆராய்வதற்கு பவ்ரல் அமைப்பு தகவல்களுக்கான உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி நீர்வழங்கல் சபைக்கும், மின்சார சபைக்கும் விண்ணப்பமொன்றை அனுப்பிவைத்து இப்பிரிவில் தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு நீர் இணைப்புகளையும் மின் இணைப்புகளையும் பெற்றுக்கொண்டுள்ளவர்கள் யார்? அவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொண்டவர் யார்? என்பது குறித்து ஆராய முற்பட்டது. இந்த விசாரணையின் அடிப்படையில் ஒரு நாளையில் குறித்த பிரிவில் பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு நீர் மற்றும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருந்தது. அவற்றிற்கான கொடுப்பனவுகளை தனிநபர் ஒருவர் மேற்கொண்டிருந்தார். இதன் அடிப்படையில் தேர்தல் காலப்பகுதியில் வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்கப்பட்டிருப்பதை நிரூபிப்பதற்குப் போதிய எழுத்திலான சாட்சிகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இவ்வாறான வழங்குகளின் போது முகங்கொடுக்கும் மிக முக்கிய சவால் யாதெனில், இங்கு இலஞ்சம் பெற்றுக்கொண்ட எவரும் சாட்சியமளிக்க முன்வராமையாகும். தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஆசீர்வாதத்தினால் அதனை எம்மால் வெற்றிகொள்ள முடிந்தது. அடுத்த சவால் யாதெனில், PAFFREL, CMEV ஆகிய நிறுவனங்கள் என்ற வகையில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்வதற்கான சட்ட ரீதியான ஆற்றல் எமக்கு இல்லாமல் இருந்தது. அதற்கு அஞ்சாமல் மொணராகலை பிரதேச சபையின் மதுறுகெட்டிய பிரதேசத்தின் இரண்டாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக்கொண்ட அதேபோல் அடிக்கடி எமக்கு முறைப்பாடுகளை முன்வைத்த திரு. சுனில் சாந்த இணக்கம் தெரிவித்தார். அதனடிப்படையில், அவரது உதவியுடன் குறித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இலஞ்ச வழக்கு மொணராகலை மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைக்கு மத்தியில் முகங்கொடுத்த சவால்களை இக்கட்டுரையில் அலச நாடவில்லை என்றபோதும், அதில் பெற்றுக்கொண்ட வெற்றிகளையும் எதிர்காலத்தில் அது தாக்கம் செலுத்தக்கூடிய விதத்தையும் அலச எதிர்பார்க்கின்றேன்.

## இந்த வழக்கில் கவனத்தை ஈர்த்த முக்கிய விடயங்கள்

1. தேர்தலொன்றின் போது வாக்காளருக்கு தனது முடிவை சுதந்திரமாக எடுப்பதற்கு செல்வாக்கை பிரயோகிக்கக் கூடியதாகவிருப்பது தேர்தல் அறிவிப்பு செய்யப்பட்டதன் பிந்திய காலம் அதாவது தேர்தல் காலப்பகுதி மட்டுமன்றி அதற்கு முன்னரும் அதன் செல்வாக்கு ஏற்படலாம்.
2. மிகவும் கஷ்டமான பொருளாதார நிலையிலுள்ள மக்களுக்கு பௌதிக ரீதியான உதவிகளை வழங்குவதன் மூலம் வாக்காளர்கள் மீது செல்வாக்கு செலுத்தப்படலாம்.
3. இவ்வாறான இலஞ்ச வழக்கொன்றை நிரூபிக்கும் போது சம்பந்தப்பட்ட வேட்பாளர் தனிப்பட்ட முறையில் இலஞ்சம் வழங்குவதுடன் சம்பந்தப்பட்டார் என்பதை நிரூபிப்பது அத்தியாவசியமானதல்ல என்பதும் அவரது பிரதிநிதியொருவர் ஊடாக கூட அவரால் வழங்கப்படும் இலஞ்சமொன்று இங்கு ஏற்புடையதாகுமென்பதும்.
4. இவ்வாறான ஒரு வழக்கு விசாரணையை நிரூபிக்கும் போது நீதிபதி திருப்தியடையும் அளவு நிரூபிக்கப்படுமாயின், வாக்கெடுப்புப் பிரிவொன்றில் யாதெனுமொரு தொகுதியின் வாக்கெடுப்பை செல்லுபடியற்றதாக்கலாம்.
5. வேட்பாளர்கள் நேரடியாக அல்லது வேறு வகையில் யாதெனுமொரு தொகைப் பணம், பெறுமதியான ஒரு பிரதியுபகாரத்தை வழங்குதல் அல்லது பரிசொன்றை, கடனொன்றை அல்லது வாக்குறுதியொன்றை வழங்குவதும் அவ்வாறு வழங்குவதற்கு உடன்படுவதும் சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்படுமாயின் அது மோசடியான செயற்பாட்டின் கீழ் வரும் இலஞ்சமெனும் குற்றத்துடன் தொடர்புபடுகிறது.
6. வேட்பாளர் சார்பாக பணம் செலுத்தப்பட்டுள்ள நபர் அவ்வாறு பணம் செலவிடுவதற்கு பொருளாதார ஆற்றல் அற்ற ஒருவர் என்றும் அவர் வேட்பாளரின் ஆதரவாளர் என்றும் முறைப்பாட்டின் சாட்சிகளிலிருந்து உறுதிபடுத்தப்பட்டுள்ளமை.
7. குறித்த காலப்பகுதியில் இந்த வேட்பாளர்கள் நேரடியாகவோ வேறு வகையிலோ அவரது வாக்கெடுப்பு பிரதேசத்தில் வாக்காளர்களுக்கு பலவிதமாக இலஞ்சம் வழங்கியுள்ளமை.

## முறைப்பாட்டுத் தீர்ப்பு தொடர்பான நீதிபதி அவர்களின் கவனத்தை ஈர்த்த விடயங்கள்

1. பொலிசாரினால் நடாத்தப்பட்ட விசாரணைகளின் படி குறித்த வேட்பாளர் இலஞ்சக் குற்றத்தை இழைத்திருப்பது தமது விசாரணைகளிலிருந்து உறுதியாவதாகத் தெரிவித்தபோதும், அக்குற்றத்திற்கு உரிய வேட்பாளரைக் கைதுசெய்ய சட்டரீதியாக வாய்ப்பிருந்தபோதும் கைது செய்யப்படாமை.
2. இந்த வழக்கின் போது தேர்தல் ஆணைக்குழுவின் பிணக்கு முகாமைத்துவ அலகின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் விசாரணை அறிக்கை சுயாதீனமானதும், சுதந்திரமானதுமான உசாத்துணையாக வழக்குத் தீர்ப்பிற்கு அடிப்படையாக கொள்ளப்பட்டுள்ளமை.

## இந்த வழக்குத் தீர்ப்பு தேர்தல் களமிறங்கும் வேட்பாளர்களுக்கு விடுக்கும் செய்தி

1. எதிர்வரும் எந்தவொரு தேர்தலின் போதும் யாதேனும் வேட்பாளர் ஒருவர் அல்லது அவரது ஆதரவாளரொருவர் வாக்காளருக்கு நேரடியாகவோ அல்லது வேறு வகையிலோ யாதேனுமொரு பணத்தொகையை, பெறுமதியான பொருளை, அன்பளிப்பை, வாக்குறுதியை வழங்கியதாகவோ அல்லது அவ்வாறு வழங்க இணங்கியதாகவோ நீதிமன்றத்தின் முன்னிலையில் நிரூபிக்கப்படுமாயின், அவர் தேர்தலில் வெற்றிபெற்றபோதும் அவரது உறுப்புரிமை இல்லாதொழிந்து விடும். அதனடிப்படையில் எதிர்காலத்தில் தேர்தல் களமிறங்கும் வேட்பாளர்கள் வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
2. எதிர்காலத் தேர்தல்களின்போது வேட்பாளர்களுக்கு தமது எதிரணி வேட்பாளர்கள் பற்றி விளிப்பாக இருப்பதன் மூலம் அவர்கள் தேர்தல் கையூட்டு வழங்கியிருப்பதாக உறுதி செய்துகொள்ளப்படுமாயின் உறுப்பினர் பதவியை வறிதாக்க முடியும். அதன்படி எதிர்காலத்தில் தேர்தல் ஆணைக்குழுவிற்கும், கண்காணிப்பு அமைப்புகளுக்கும் புறம்பாக, வேட்பாளர்கள் அத்துடன்/ கட்சிகள் ஏனைய வேட்பாளர்கள் மற்றும் கட்சிகள் மீது விளிப்பாக இருப்பது முக்கியமாகும்.
3. பணமும் பலமும் இருந்த மாத்திரத்தில் தேர்தலொன்றில் வெற்றி பெற முடியாது.
4. தேர்தல் முறைப்பாட்டு விசாரணைக்கும் தொடராய்வுக்கும் முறைசார்ந்த நிறுவன முறைமையொன்று அமையப்பெற்றிருக்க வேண்டும்.
5. தேர்தல் முறைப்பாடுகளை மிகவும் முறைசார்ந்த ஒரு பொறிமுறையூடே நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அவசியமான சட்ட அதிகாரத்தை தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்குதல்.
6. தேர்தல் வழக்குகளை ஆறு(6) மாதங்கள் அல்லது அதற்கு குறைந்த ஒரு காலப்பகுதியில் விசாரணை செய்து முடிப்பதற்கு அவசியமான சட்டவாக்கம் இடம்பெற வேண்டியுள்ளமை.
7. வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரத்தைக் குறைப்பதற்கு தேர்தல் முறைக்கு தொகுதிவாரி அடிப்படை சேர்க்கப்பட்டபோதும் வேட்பாளர்களின் செலவுகளை மட்டுப்படுத்துவதற்கான சட்டவாக்கம் எதுவுமின்றி அம்முறை வெற்றி பெற முடியாமையும் வேட்பாளர்கள் அதனை தனது நன்மைக்காக எடுத்துக்கொண்டு மொத்த பணத்தையும் தொகுதியொன்றுக்கு செலவிடுவதனூடாக வாக்காளர்களை விலைபேச முனையலாம்.

இந்த வழக்கு மற்றும் அதனூடாக எழுந்த விடயங்கள் குறித்து அதிகாரிகளின் கவனத்தைச் செலுத்தி அவசியமான தேர்தல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**இந்த வழக்குத் தீர்ப்பை எதிர்த்து பிரதிவாதி தற்போது மேன்முறையீடு செய்துள்ளாரென்பதையும் குறிப்பிட வேண்டும்.**

## பக்கம் 4...

- **தேர்தல் நியாய மன்றொன்றை நிறுவுவதற்கான யோசனை**

தேர்தல் தவறுகள், அரசியல் கட்சிகளின் பிணக்குகள், வேட்புமனுக்கள் சம்பந்தமான பிரச்சினைகளை துரிதமாக தீர்த்துக்கொள்வதற்கும் தற்போது தேர்தல்கள் சம்பந்தமாக காணப்படும் வழக்கு விசாரணைகள் தாமதமடைவதைத் தடுக்கும் பொருட்டும் தேர்தல் நியாய மன்றொன்றை நிறுவுவதற்கு முன்மொழியப்படுகின்றது.

- **மாகாண சபைத் தேர்தலை துரிதமாக நடாத்துதல்**

தற்போது இயங்கிவரும் மாகாண சபைகளுக்கு பல்லாண்டு காலமாக மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதன் காரணமாக மாகாண சபைத் தேர்தல் துரிதமாக நடாத்தப்பட வேண்டும் என்பது தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடாகும். அதற்கு பொருத்தமான எந்தவொரு தேர்தல் முறையின் கீழும் அதனை நடாத்துவதற்கு பொருத்தமான சட்டத் திருத்தங்களை துரிதமாக மேற்கொண்டு தேர்தலை நடாத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுத்துமாறு தேர்தல் ஆணைக்குழு செயற்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

- **உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் முறைமையில் அத்தியாவசிய திருத்தங்கள்**

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) சம்பந்தப்பட்ட ஏராளமான பிரச்சினைகள் ஏற்பட்டதுடன் அவற்றிற்கு துரித தீர்வு காண்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அடங்கிய யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- **தேர்தல் கடமை அலுவல்களில் ஈடுபடும் பணியாட்குழுவின் பெயரிடலை திருத்துதல்**

தேர்தல்களின்போது வாக்கெடுப்பு நிலைய மற்றும் வாக்கெண்ணும் பணிகளில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்களின் பதவிப் பெயரான கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ எழுதுநர் என்ற பதவிப் பெயர்களுக்குப் பதிலாக, வாக்கெடுப்பு நிலையப் பொறுப்பு அலுவலர்/ உதவி வாக்கெடுப்பு அலுவலர்/ வாக்கெடுப்பு அலுவல் சேவை உதவியாளர் என்றவாறும் வாக்கெண்ணும் அலுவலர் என்றவாறும் திருத்துதல்.

- **மக்கள் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துள் திருப்பி அழைத்தல் - Recall**

யாதெனுமொரு தேர்தலின் போது/ வாக்கெடுப்பின்போது மக்களினால் தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் மக்களின் நோக்கங்களுக்கு முரணாகவும் சட்டவிரோதமான முறையிலும் செயற்படுவார்களாயின், அத்தகைய மக்கள் பிரதிநிதிகளை திருப்பி அழைக்கும் ஒரு முறையை ஏற்படுத்துவதற்கான சட்டங்களை ஆக்குதல்.

- **பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம்**

பாராளுமன்றத்திற்கு தெரிந்தனுப்பப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரொருவர் தனது பதவிக் காலத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் யாதெனுமொரு நோய்நிலைமை அல்லது வேறு ஏதேனும் சிறப்பான ஒரு காரணமின்றி அக்காலத்துள் நடைபெற்ற பாராளுமன்ற சபை அமர்வுகளில் குறைந்தபட்சம் 1/3 ற்கேனும் கலந்து கொள்ளாதிருப்பின் அவ்வுறுப்பினரின் எதிர்வரும் பதவிக்காலத்தை வறிதாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

- **ஒழுக்கநெறிகளை சட்டமாக்குதல்**

தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் ஒழுக்கநெறிகளை சட்டமாக்குதலும் அவை மீறப்படுகின்ற போது தேர்தல் குற்றமொன்றாக உட்படுத்தி உறுப்பினர் பதவி வறிதாவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றவாறு சட்டப் பணிப்புக்களை உட்படுத்தலும்.



தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் திரு. ஜீவன் தியாகராஜா அவர்கள் வடமாகாண கௌரவ ஆளுநராக நியமனம் பெற்றுச்செல்வதை முன்னிட்டு 2021.10.26 ஆம் திகதி நடைபெற்ற வாழ்த்துத் தெரிவிக்கும் வைபவத்தின் சிறப்பு நிகழ்வுகள்.



IFES Sri Lanka நிறுவனத்தின் அனுசரணையுடன் 2021.11.11, 2021.11.12 ஆகிய தினங்களில் களுத்துறை அவானி ரெசோர்ட் இல் நடைபெற்ற தேருநர் இடாப்பு மீளாய்வு பற்றி அறிவுறுத்துவதற்கான இரு நாள் விழிப்பூட்டல் வதிவிட பயிற்சிச் செயலமர்வின் விசேட நிகழ்வுகள்.




IFES Sri Lanka நிறுவனத்தின் அனுசரணையுடன் 2021.11.02, 2021.11.03 ஆகிய தினங்களில் களுத்துறை அவானி ரெசோர்ட் இல் நடைபெற்ற தேர்தல் முறைகள் பற்றிய இரு நாள் வதிவிட பயிற்சிச் செயலமர்வின் விசேட நிகழ்வுகள




தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகளின் பங்கேற்புடன் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரினால் 2021.11.19 ஆந் திகதி திருகோணமலை 'எடின்பரோ விடுமுறை விடுதியை' சுற்றுப் பயணிகளின் பாவனைக்காக திறந்துவைக்கும் நிகழ்வின் விசேட நிகழ்வுகள்.





தேருநர் இடாப்புத் தகவல்களை கணினி ஃகையடக்கத் தொலைபேசி வாயிலாக பெற்றுக்கொள்ளும் புதிய முறை மற்றும் அப்பணியின் அங்குரார்ப்பண நிகழ்வு உள்ளிட்ட 2021.10.26 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவின் நடைபெற்ற ஊடக சந்திப்பு



IFES Sri Lanka நிறுவனத்தின் அனுசரணையுடன் தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்களின் பங்கேற்புடன் 2021.10.27 - 2021.10.29 ஆம் திகதி வரை கண்டி அமாயா ஹில்ஸ் ரிசோர்ட் இல் நடைபெற்ற தேர்தல் முறைகள் பற்றிய மூன்றுநாள் வதிவிட பயிற்சிச் செயலமர்வின் விசேட நிகழ்வுகள்.




IFES Sri Lanka நிறுவனத்தின் அனுசரணையுடன் தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்களுக்காக தமிழ்மொழியில் 2021.11.08, 2021.11.09 ஆம் திகதிகளில் தம்புளை லேக் ரிசோர்ட் இல் நடைபெற்ற தேர்தல் முறைகள் பற்றிய இரண்டு நாள் வதிவிட பயிற்சிச் செயலமர்வின் விசேட நிகழ்வுகள்.




IFES Sri Lanka நிறுவனத்தின் அனுசரணையுடன் 2021.11.16 - 17 ஆகிய தினங்களில் கண்டி கோல்டன் கிறவுன் ஹோட்டலில் நடைபெற்ற தேர்தல் பிணக்குத் தீர்வும் நான்காண்டு கால உபாயமுறைத் திட்டத்தை (2022 - 2025) தயாரித்தலும் பற்றிய இரண்டு நாள் வதிவிட செயலமர்வின் விசேட நிகழ்வுகள்.



தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு அக்காலத்துள் எய்திய இலக்குகளும் நோக்கங்களும் குறித்து தயாரிக்கப்பட்ட 'கடந்துவந்த ஓராண்டு கால அடிச்சுவடுகள்' நினைவு மலரையும் அதன் காணொளிகளையும் வெளியீடும் வைபவத்தின் விசேட நிகழ்வுகள்.


**மதியுரைச் சபை**

சட்டத்தரணி நிமல் ஜீ.புஞ்சிஹேவா - தவிசாளர்
எஸ்.பீ.திவாரத்ன - உறுப்பினர்
கே.பீ.பீ.பத்திரண - உறுப்பினர்
எம்.எம்.மொஹமட் - உறுப்பினர்
பீ.எஸ்.எம்.சாள்ஸ் - உறுப்பினர்
சமன் ஸ்ரீ ரத்நாயக்க - தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
எச்.எம்.ரி.டி.ஹேரத் - செயலாளர்
ரசிக்க பீரிஸ் - மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்)

**பதிப்பாசிரியர்** - சன்ன பீ. த சில்வா (பணிப்பாளர்)
**கணினி பக்க வடிவமைப்பு** - அமில கமகே
**அச்சுப் பதிப்பு** - அரசாங்க அச்சகம்
**வெளியீடு** - ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் பிரிவு, தேர்தல் ஆணைக்குழு



**உங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எமக்கு எழுதி அனுப்புங்கள்:**

பதிப்பாசிரியர் - "புள்ளடியின் பலம்"
தேர்தல் ஆணைக்குழு
தேர்தல்கள் செயலகம்
02, சரண மாவத்தை
இராஜகிரிய,
இலங்கை

(+94)112868441-42-43
(+94)112868426
info@elections.gov.lk
www.elections.gov.lk
SriLankaElectionCommission
elecomsl
Election Commission of Sri Lanka
Election Commission of Sri Lanka


ISSN-2706-0055

இச்சஞ்சிகை தாங்கிவரும் ஆக்கங்களில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கான பொறுப்பு அந்தந்த ஆக்கங்களை எழுதியவர்களைச் சாரும் என்பதுடன் அவ்வாக்கங்களில் அடங்கியிருக்கும் விடயங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கருத்து வெளிப்பாடன்று